# பத்திரிகைச் செய்தி

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனுக்கென தமிழ்நாடு அரசு முன்னெடுத்து வரும் பல்வேறு திட்டங்களில் ஒன்றாக கடந்த மார்ச் 1 முதல் 'நான் முதல்வன்' திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கென இணையவழி நேரலை அமர்வுகள் வரும் ஏப்ரல் 18 முதல் நடக்கவிருக்கின்றன.

ஏப்ரல் 18, 22 ஆகிய தேதிகளில் அறிவியல் புல மாணவர்களுக்கும், ஏப்ரல் 19, 23 ஆகிய தேதிகளில் பிற்பகல் 2 முதல் 4 மணி வரை, கலை, வணிகம் உட்பட பிற புல மாணவர்களுக்கும் நடக்கவுள்ள இந்த நேரலை அமர்வுகளில் துறைசார் நிபுணர்கள், வழிகாட்டிகள் மற்றும் சாதனையாளர்கள் பங்கேற்கிறார்கள்.

மாணவர்கள் பள்ளி இறுதியாண்டு முடித்தபின்னர் உயர்கல்வியில் சேர்வதன் முக்கியத்துவம் குறித்தும், நுழைவுத் தேர்வுகள் பற்றியும், எந்தக் கல்லூரியில் சேரலாம், எந்தப் படிப்பை தேர்ந்தெடுக்கலாம் என்பது தொடங்கி அவற்றுக்கான உதவித்தொகை, சாத்தியமான வேலைவாய்ப்புகள் வரையும் வல்லுநனர்கள் ஆலோசனைகள் வழங்குவார்கள். இரண்டு மணி நேர அமர்வுக்குப் பின்னர் மாணவர்கள் இணையத் தேடல் மூலமாக விவரங்களை அறிந்துகொள்ளவும் மதிப்பாய்வு(Survey) மூலம் தங்களை மதிப்பீடு செய்துகொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் ஒரே நேரத்தில் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் இந்த அமர்வுகள் இணையம் மூலம் நேரலை செய்யப்படும்.

ஆணையர்,

பள்ளிக் கல்வி